உ

கடவுள் துணை.

மதுரை

சொக்கர் அலங்காரம்

இவை-சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரா லியற்றப்பட்டு,

ஆ-இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெம்பர் வீடு.

உ

மதுரை

சொக்கர் அலங்காரம்.

நேரிசை—வெண்பா.

விண்டுவொடுசெந்திருவும் வேதன் கலைமாதும்
அண்டரொடுரவிமதியோ ரானவரும்—தொண்டர்முதல்
யார்க்கும்பொதுமதுரை யப்பன் திருவடியை
பார்க்கமனமேசமயம் பார்.

புருஷன்சொல்—தெம்மாங்கு.

மாதவங்கள்செய்தல்லவா மானிடராய்ப்பிறந்தமிப்போ
வேதம்போற்றுந்தென்மதுரை வாமயிலேபோய்வருவோம் (ந)
அவர்-தோடும்விடையும் துலங்கும்வடிவும்
பிறையின்முடியும் புனலிலொளியும்
கரியினுரியும் புலியினடையும்
அரியுமயனும் பரவுவடிவும்
அடியே-எத்தனைகோடி உத்தமர்தேடி
வருவார்நாடி புகழைப்பாடி
அவர்களடியின் பொடிகளாலே
அணுவினுமே வினைகள்போமே
அடியே—சீக்கிரம்வாயே சேதியைக்கேளே
வாக்கியந்தாயே வழியைப்பாரே(நன்)
(தெ)புரசைநகரைவிட்டுப் புறப்பட்டோம்பெண்ணணங்கே
வரிசையாகத்தடத்தின்சேதி வளையக்கேளுவ்பரமாக (நன்)

அலங்காரம்.

சூளைக்கடையின்காலகெதியே பாருமெதிரேபார்க்கின்றசதியே
ஆனைகவுனி அடுத்தவீதியே சேனைபாவும்டேஷனிதுவே
அடியேமானே ஒத்தவாடை பாரு மதிராஸ்ரயில்வேடேஷனேது
தேகேஜனலாள்பத்திரிபாரு திருடர்ஜெயிலுங்கடந்தம்பாரு
அடியே—காந்தைதமிடியே கடுகநடவே
பாத்தைதபோலே பார்வையுனக்கே(நன்)
(தெ)தெற்குகடல்காட்டும் தென்மாற்கடேஷனிது
திற்கயிடங்கிட்டாயலேநெருங்குதடி ஜெனப்பெருக்கம் (நன்)
அடியே—கூட்டம்நடுவே நெருங்கவேண்டாம்
குமிங்கிவேர்வை சொரியவேண்டாம்
காசுபணத்தை மதிக்கவேண்டாம்
காலையெடுத்து நடக்கவேண்டாம்
அடியே-பல்டுகிளாசு பாசைபாரு
பாவையென்னுடன் சொருசாயேறு

இஷடமான பொருளைக்கேளு
இதுவேபயணம் மதுரைநேறு
அடியே-மணியடித்தார் பிகில்கொடுத்தார்
மார்ச்சுபாசும் காட்டிவிட்டார்
ரயிட்டுகொடியும் காட்டிவிட்டார்
லயனின்மேலே முடிக்கிவிட்டார்
அடியே-குப்புகுப்பென புகைகிளம்புது
கொடிகள்செடிகள் கூடவருது
மப்புமாசியும் ஒன்றாய்விளங்குது
மலைகளெல்லாங் கிடுகிடென்னுது
அடியே-ஓட்டம்பாரு ஓசைகேளு
வாட்டம்பாரு வருகும்நேறு (நன்)

(தெ)கண்டமடிவசதாப்பேட்டை காணுதுபார்பரங்கிமலை
விண்டவாயைமூடுமுன்னே வந்தமடிபல்லாவரம்

அடியே-வண்டலூருங்கடந்தங் கூடுவாஞ்சேரியுமிதுவேபாரு
சிங்கப்பெருமாள்கோவில்பாரு செங்கல்பட்டில்அதிகசிறு
அடியே-சிவில்கோட்டு தெரியுதுபார்
திருடர்மொரடர் வெறியரிவற்கு
பொவுஷைபோக்கும் ஜெயிலுமதுவே
போலீஷ்டேஷன் ஊர்க்குபொதுவே
அடியே-வடகளத்தூர் பின்னால்போச்சி
வருகும்வேகம் பட்டாளமாச்சி
மதுராந்தகமும் நெருங்கிப்போச்சி
மானேஅச்சர வாக்கமாச்சி
அடியே-பெரும்பயரதோ பதுங்கிபோச்சி
பார்த்தால்ஒலக்கூர் ஒதுங்கிபோச்சி
திண்டிவனத்தில மீட்டிங்காச்சி
தேனேமணியும் பணிரெண்டாச்சி
மண்ணடி-பகடாயெடடி பசியைத்தீரடி
சொகுசாய்குந்தடி சோம்பல்விடடி (நன்)

(தெ)தீராவினைதீர்க்கும் தென்மயிலம்தெரியுதுபார்
ஆறுமுகன்பொன்னடியை ஆரணங்கேதோத்திரஞ்செய் (நன்)

அடியே-இதுவேவிக்கிர வாண்டிபெண்ணே
விழுப்புரமது தாண்டிகண்ணே
பண்ணுரொட்டியும் கடந்தம்பெண்ணே
பாருய்நெல்லி குப்பமண்ணே
அடியே-திருப்பாபுலியூர் தேவஸ்தானமும்
தெரியுதுபார் கூடலூரும
விருப்பமான ஆலப்பாக்கம்
விடிந்தஜாமம் பரங்கிபேட்டை

அடியே-தொல்லைவினைக ளெல்லாம்வாட்டும்
இல்லைகோபுரம் தெரிசனம்பார்
(தெ)கின்னைமொழியாரணங்கே கதிர்வடிவேல் துணையிருப்பார்
கொள்ளடத்தில்வண்டிவருது குலுங்கிறலும்பயப்படாதே (ந)
அடியே-பாளக்கனாயும் கடந்துபோட்டோம்
பாருய்சிரு காழியடைந்தோம்
அனந்தநாத புரமுந்துடர்ந்தோம்
அப்புரந்தானே மாயவரமும்
அடியே-குத்தாலமதோ குரிகிப்போச்சி
கூடவேநர சிங்கபேட்டை
வித்தகமருள் திருவிடமருதூர்
விவரமாய்ப்பார் கும்பகோணம்
அடியே-கும்பலிங்கரை கருத்தில்வையடி
ஒன்பதுகோண மூனாப்பாரடி (நன்)
(தெ)சுந்தரப்பெருமாள்கோவில் சொல்லுபாவனசமிது
அந்தமானஐயம்பேட்டை அடுத்தமடிதஞ்சாவூரை (நன்)
அடியே-அரசனுடைய அரண்மனைப்பார்
ஆனைசேனை பரிவாரம்பார்
காமாக்ஷியுட சன்னதிபார்
காவல்கோட்டை அகழியைப்பார்
அடியே-வருகும்போது விவரஞ்சொல்லுவேன்
வாடிபூத லாருங்காட்டுவேன்
திருவரம்பூர் தெரியபுல்லுவேன்
திருச்சினாப்பள்ளி எரங்கச்சொல்லுவேன்
அடியே-தானவளந்த தாயுமானவர்
தாரிலெவர்க்குந் சந்தையானவர்
தேனுளணங்கே கிரியைப்பாரோ
தெரிசித்திடுவோம் யேரிவாயே
அடியே-திரும்புங்காலை நன்றாய்ப்பார்ப்போம்
ஸ்ரீரங்கமு மிங்கேதோற்றும்
எழுமதிலும் கோபுரங்களும்
இமையோராதிகள் தொழுதல்தளமும்
அடியே-விபீஷணாழ்வார் தொழுதபாதர்
வைகுண்டத்திலேவாழும்நாதாபுவியிலெங்கள்மீதில்வாதா
போற்றிசெய்வோம் அருளைதாதா
அடியே-யென்றுதுதியே யேக்கம்நீக்கே
நின்றுதுதியே நிமிஷம்நினையே(நன்)
(தெ)தென்குளத்தூர்மணப்பாறை தெரியுதுபார்வையம்பாடி
அன்னமொழிமாதரசே அய்யலூரை அடுத்தமோடி (நன்)
அடியே-வடமருதையைக் கடந்தமோடி
வந்தோம்அப்பாத் துரையும்நேரடி

சோளவந்தான்கோவில்பாரடி சமயநல்லூர் சிரியவூரடி
அடியே-தென்மருதை கண்டமோடி
தேசமெங்கும் குளிர்ந்தமோடி
அம்மன்சன்னதி கோபுரம்பாரடி
அழகுமருதை வீதிபாரடி
அடியே-திருமலநாய்க்கன் மாலினபூசும்
தீர்ப்புகோட்டு கச்சேரிகளும்
சருவதேசமுங் கடிதங்கொடுத்து
சஞ்சலமொழிக்கு போஸ்டாபீசும்
அடியே-செப்பினசேதி சிருப்பாரோ
தெப்பக்குளமும் தெருவைப்பாரோ (நன்)
(தெ)வீதிபலகடந்து வந்தோம்புதுமண்டபத்தில்
ஓதும்சரஸ்வதியாள் ஓங்கியிதோகுடியிருக்கிருள் (நன்)
அடியே-புதுமண்டபத்தின் சொகுசைப்பாரு
புத்தகக்கடையின் அழகைப்பாரு
வெங்கலக்கடையின் விவரம்பாரு
வேணுமான பொருளைக்கேளு
அடியே-பொற்ருமரையில் தீர்த்தமாடு
பொசிக்கமிட்டாய் கடையைக்கூடு
வீரனுடைய அடக்கம்பாரு
வேதியர்கூட்டமும் சன்னதிபாரு
அடியே-பஞ்சவர்ன கிளிகள்பாரு
பாஷைபலதும் பேசங்கேளும்
அஞ்சாமருதை காவல்பாரு
அன்னமேயென்னுட மொழியைகேளு
அடியே-தாகம்நீக்கு ஜனங்கள்போக்கு
தொடர்ந்துநோக்கு திரவுன்வாக்கு (நன்)
(தெ)வாக்குதிரவுமென்று வண்மையுடன்சொன்னவரே
கார்க்குஞ்சதாசிவமென் கருத்தினிலேயிருக்கலையா (நன்)
அடடா-ஈசனமது உள்ளத்திலில்லையோ
ஏனேயிப்படி நடக்கத்தொல்லையோ
சாசையழித்து வரவும்சள்ளையா
கருத்திலரியா மூடர்சொல்லையா
அடடா-நம்பித்தொடர்ந்தேன் யேனேநடந்தேன்
வழியுங்கடநதேன் ஊரும்அடைந்தேன் (நன்)
(தெ)மெத்தவருத்தமுற்று மேனியெல்லாம்வாடுகிருய்
அத்தனதுதிருவருளை யாரரியக்கூடுமடி (நன்)
அடியே-அகிலபுவனம் எவையுமவனே
அணுவும்வேறு மானதவனே
சகலசீவ உயிருமவனே
சாமியவனே நாமும்அவனே

அடியே-சாரகோரதிரக்கனாயி ஆருமனத்தைத்தேரப்பாரு
சேறும்பிரவிதூரும்நேரு பாரிலுனக்குகூரக்கேளு
அடியே-வேதநெறியே ஓதும்பெரியோர்
பாதம்பிடியே சூதையறியே (நன்)
(தெ) மதுரைநகர்பார்க்க மனமகிழ்ந்துவந்ததன்றி
சூதிரைவித்தவன் றனைநாடி கோரிவரங்கேழ்க்கவிலையே (நன்)
அடடா-ஈசன்நம்மிடம் பேசப்போகுதா
யின்றகடவுள் மனதிலில்லையா
ஆசையிருந்து அலைவதல்லால்
ஐயோவரமுங் கொடுக்கப்போகுதா
ஐயா, ஏனேயிப்படி ஆவல்கொள்ளுவீர்
என்னையிழுத்து உள்ளேபோகுறீர்
கானலைப்பார்த்து நீரென்றலைவீர்
கடவுளிருக்கு மிடமுமறியீர்
ஐயா, ஆணுப்பிறந்தும் புத்தியில்லையா
அடியாள்சொன்னதும் தெரியவில்லையா(நன்)
(தெ)பித்தம்பிடித்தவனை பிள்ளைகறிதின்றவனை
மெத்தமெத்தபெருமைசொல்லி மிரட்டுகிறுயென்கணவா (நன்)
அடடா-ஒருத்திக்குடலில் பாதிகொடுத்தான்
ஒருத்தியெடுத்து தலையில்வைத்தான்
பிரமன்சிரசை திருகிப்பிடித்தான்
பிரம்பாலடியும் பட்டுப்பொருத்தான்
அடடா-மண்ணுமெடுத்தான் பெண்ணுங்கொடுத்தான்
மருத்துவச்சிபோல் திருத்தஞ்செய்தான்
கண்ணன்கொடுத்த யெச்சிலைத்தின்றுன்
காட்டில்விரகை யொடித்துவித்தான்
அடடா-இன்னமுஞ்சொல்லவா மானமில்லையா
போனதெல்லாம் யெடுத்துபோடவா (நன்)
(தெ)கரியையுரித்தவனை கையில்மழுவெடுத்தவனை
அறியனென்றுமிரட்டுகிறுய் அவனைச்சிவனென்றே துதித்தாய்
அடடா-கூட்டிக்கொடுத்ததான் குலத்தைகெடுத்தான்
குரக்குலத்திலே மகனைத்துளைத்தான்
மூத்தபிள்ளையை தெருவில்விட்டான்
முரட்டுமொட்டை யேறித்திரிந்தான்
அடடா-வல்லாளன்றனக்கு பிள்ளையாய்பிறந்தான்
வருடந்தோறும் கருமஞ்செய்கிறுன்
எல்லாவீட்டிலும் யிரந்துதின்றுன்
யிடமிலலாமல் சுடலைகின்றுன்
அடடா-யென்னுசடலம் யிதற்கானடலம்
யெல்லாந்தெரியும் சொல்லவாகுறையும்

(தெ)காரும்பசுவானுன் கன்றுதனைக்கொன்றுவிட்டான்
திராவிசனம்வைத்தான் தேங்கவைத்தானுலகமெல்லாம் (நன்)
அடடா-வஞ்சியர்தமக்கு வளையல்வித்தான்
வனத்துபெண்களைக் கற்பழித்தான்
தாசிவீட்டிலே வாதஞ்செய்தான்
தன்னுடையபிள்ளைக்கி வணங்கிறின்றான்
அடடா-பன்றிக்காக அபயமென்றான்
பார்த்தன்கையிலே வில்லடிபட்டான்
மூத்தபிள்ளைக்கி கன்னிகழிய
முதலில்லாமல் அலையவிட்டான்
அடடா-கட்டத்துணியு மில்லாமிடியன்
கரியினுரியை போத்தவெரியன்(நன்)
(தெ)கெஞ்சாவெரியாலே கேட்டவரங்கொடுத்துவிட்டு
அஞ்சிபயந்தோடியல்லோ ஐவேலங்காய்தனிலொளித்தார்(நன்)
அடடா-பெண்ணைஎதிர்த்து சபதங்கூறினான்
பிள்ளைகள்போல ஆட்டமாடினான்
குடிகாரனுட குணத்தையறிந்தும்
கூறைகூட பிரிக்கவைத்தான்
அடடா-நரியைபரியாய் மாத்திவைத்தான்
நமனைகூட விழவுதைத்தான்
தெருவில்மண்ணை மருந்தாய்கொடுத்தான்
தீராவழக்கை சேர்த்துகெலித்தான்
அடடா-எல்லாப்பிழைப்பும் பிழைத்துபோட்டான்
இன்னம்பிறவி யெடுக்கமாட்டான்
நல்லோன்போல மௌனங்காட்டுவான்
நம்பினுக்கால் கெடுத்துப்போடுவான்
அடடா-காடுசெடியை வீடாவிடுவான்
மாட்டைகாட்டி மயக்கித்திரிவான்(நன்)
(தெ)பணமேதுகாசியேது பாம்பல்லவாஆபரணம்
பிணமிருக்குஞ்சுடலையிலே குடியிருக்கும்ஆண்டிப்பயலே (நன்)
அடடா-கல்லாலடியும் வில்லாலடியும்
காட்டுவேடன் செருப்பாலுதையும்
எல்லாம்பொருத்த கெஞ்சாவெறியன்
யேனோஅவனை நானுப்பணிய
அடடா-சூதுக்காரன் வாதுக்காரன்
திரிபுரத்தையும் யெரித்தபறையன்
மாதைச்சுமந்து திரிந்தவெறியன்
மாளாவிஷத்தை பாலாயுண்டவன்
அடடா-இதுவும்பிழைப்போ யென்னுகொழுப்போ
முழுதுமுறக்க பொழுதுமிருக்கோ (நன்)

சொக்கர் அலங்காரம்.

புருஷன்சொல் தெம்மாங்கு.

உன்னைமலைத்தல்லவோ உருகுகிறான்பெண்ணணங்கே
தென்னவனைவீழ்த்தனுதன்திறமுறைக்கவயதுவேணும்(ந)

அடியே-உலகமெவையும் அழியும்பொருளே
உடலும்நானே சடலைக்கனையே
வினைப்பதெல்லாம் நடப்பதில்லையே
நேத்திருந்தவர் இன்றைக்கில்லையே

அடியே-தொண்டர்க்காக பித்தனையாட்டம்
கொடுத்துசோதனை செய்தநாட்டம்
அண்டர்முதலால் ரிஷிகள்கூட்டம்
யாரும்புகழும் மதுரைதேட்டம்

அடியே-வுனக்குதெரியாதாலே உரைத்தோம்சீச்சீ
தெரியப்படுத்த பொருத்தேன்பேச்சி
ரவியும்மேற்கே மறைந்துபோச்சி

அடியே-அரும்புவிழியே அமுர்தமொழியே
திரும்புவழியே நீரஞ்செழியே (நன்)

(தெ) சிறுமணவூரென்னும்பதி சிறுவன்முனிசாமிகவி
அருமையாகசொக்கர்பாதம் அலங்காரமாய்த்துதிமனமே(நன்)

ஐயா, நன்னூல்காண்டிகை நாலடியார்
நளினமொழியா யிலக்கணங்களும்
முன்னோர்குறளும் முதியரிகண்டும்
மூடச்சிறியேன் தேடியறியேன்

ஐயா, படித்துமறியேன் பகுத்துமறியேன்
பாடும்பிறரைக் கேட்டுமறியேன்
வடிவத்தூரா மொழியைப்போலே
வரட்டுக்காக்கை யிழையும்வாறே

ஐயா, அளித்தமகனும் மலத்தைவிட்டால்
ஐயோதுடையை அறுப்பதுண்டா
களித்தயானு முரைத்தவாக்கை
கருத்தில்பிழையாய் பொருத்தவேண்டாம்

ஐயா, பெரியோரடியை தினமுஞ்சிறியேன்
மறக்கவறியேன் துதிக்கப்பெறுவேன் (நன்று)

சொக்கர் அலங்காரம்

முற்றிற்று.